# உன்னை நிச்சயமாக விடுவிப்பேன். எரே 39 : 18

விடுதலையே, விடுதலை விடுதலையே பிரியமானவர்களே கர்த்தரை நம்பினவர்களுக்கு விடுதலை கர்த்தரை துதிப்போம்.

எங்கள் பிதாக்கள் உம்மிடத்தில் நம்பிக்கை வைத்தார்கள். நம்பின அவர்களை நீர் விடுவித்தீர். **சங்கீதம் 22:4** இதில் தாவீது தன்னுடைய பிதாக்கள் விடுதலை பெற்ற விதத்தை நினைவு கூர்ந்து விண்ணப்பம் பண்ணுகிறதை காண்கிறோம்.

நாமும் நம் வாழ்க்கையில் எத்தனையோ பிரச்சனையில், வியாதியில் துக்கத்தில் விடுதலை இல்லையே என்று ஏங்கும் சகோதரனே, சகோதரியே உன்னை நிச்சயமாக விடுவிப்பேன் என்று கர்த்தர் சொல்கிறார். தாவீதுடைய வாழ்க்கையில் எதிரிகளிடமிருந்து விடுதலை வேண்டியிருந்தது. அந்த சமயத்தில் கர்த்தர் இப்படியாக விடுவிக்கிறார். சங்கீதம் 34 :7 **“கர்த்தருடைய தூதன் அவருக்கு பயந்தவர்களைச் சூழ பாளையமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்”.** என்று கர்த்தருக்குப் பயந்து ஜீவிப்போமானால் நமக்கு விடுதலையுண்டு.

தாவீதை கர்த்தருடைய தூதன் சூழப்பாளையமிறங்கி விடுவித்ததாக காண்கிறோம். தாவீது தன் வாழ்க்கையில் அநேக நெருக்கங்களினுடே தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணி கொண்டே இருந்தார். எனவே தான் சொல்கிறார். “அவர் எல்லாநெருக்கத்தையும் நீக்கி என்னை விடுவித்தார்” என்கிறார். தாவீதைப்போல நம் வாழ்க்கையிலும் கர்த்தரை நம்புவோம்.

கர்த்தருக்குப் பயப்படுவோம். அப்போது நாம் கேட்கும் காரியத்தில் நமக்கு விடுதலையுண்டு.

சில பாவங்களிலிருந்து விடுபட முடியாமல் தவிக்கும் எனக்கு அருமையானவர்களே, **யோவான் 8:36** ல் “குமாரன் விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையைாவீர்கள்”–என்றும் யோவான் 8:32 ல் சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்” என்றும் காண்கிறோம். கர்த்தரை நம்புவோமா ?

பதினெட்டு வருஷமாய் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரி இருந்தான். இயேசு அவளைக் கண்டு தம்மிடத்தில் அழைத்து **“ஸ்திரீயே உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய் என்று சொல்லி, அவள் மேல் தமது கைகளை வைத்தார். உடனே அவள் நிமிர்ந்து தேவனை மகிமைப்படுத்தினாள். லூக்கா 13:12,13.**

முப்பத்தெட்டு வருஷமாய் வியாதி கொண்டிருந்த மனுஷனைப்பார்த்து “எழுந்திரு உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட” **–யோவான் 5:8**ல் சொல்வதை பார்க்கிறோம். உடனே அந்த மனுஷன் சொஸ்தமானான். நெடுங்காலமாய் வியாதியோடு இருந்து யாருடைய உதவியும் இல்லாது காணப்பட்ட அவளை தேவன் விடுதலையாக்கினார் அல்லவா ?

உன் வாழ்க்கையில் விடுதலை வேண்டுமா ? விடுதலைக்காய் யாரை நம்பியிருக்கிறாய் ? மனிதர்களையா ? அதிகாரிகளையா ? வேலையில்லையே என்று சொல்லி உன் வாழ்க்கையில் எத்தனை ஆண்டுகள் கடந்து விட்டன. குடும்ப பிரச்சனைகளிலிருந்து விடுதலை இல்லையே என்று ஏங்குகிறீர்களா ? நீ இயேசுவை நோக்கி கூப்பிடு.

“ஆபத்து காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு, அப்பொழுது நான் உன்னை விடுவிப்பேன்” **– சங்கீதம் 50:15** என்றும், அவன் என்னை நோக்கி கூப்பிடுவான், நான் அவனுக்கு மறு உத்தரவு அருளிச் செய்வேன். ஆபத்தில் நானே அவனேடிருந்து அவனைத் தப்புவித்து அவனைக் கனப்படுத்துவேன். **சங்கீதம் 91:15** என்றும், வேதம் சொல்கிறது இயேசுவை நோக்கிப் பாருங்கள். “அவரை நோக்கிப் பார்த்தவர்கள் பிரகாசமடைந்தார்கள். அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை”. “நிச்சயமாகவே முடிவு உண்டு ; உன் நம்பிக்கை வீண்போகாது”**–நீதி 13:18**ல் சொல்கிறது.

“என்னை நோக்கி கூப்பிடு. நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்”**– எரெமியா33:3** ஆகவே இயேசுவை நோக்கி கூப்பிடு. அப்பொழுது வியாதியிலிருந்து விடுதலைத் தருவார். பிரச்சனைகளிலிருந்து விடுதலைத் தருவார். வேலையில்லா திண்டாட்டத்தை நீக்கிப் போடுவார். எவ்வித சந்தோகமும் இல்லை.

**பக்தன் பாடுகிறார்**

விடுதலை, விடுதலை, விடுதலை எனக்கு

விடுதலை, விடுதலை, விடுதலை

“**உன்னை நிச்சயமாக விடுவிப்பேன்**”– நீ பட்டயத்துக்கு இரையாவதில்லை, நீ என்னை நம்பினபடியினால் உன் பிராணன் கொள்ளைப் பொருளைப் போல இருக்குமென்று கர்த்தர் சொல்கிறார்.